**சாவகச்சேரி நகர சபை - 2021**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சாவகச்சேரி நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சாவகச்சேரி நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளக மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையினால் ரூபா 18,380,130 பெறுமதியான 21 வேலைத்திட்டங்களானது நிறைவேற்றப்படாத போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்தும் வருமான மிகை குறைத்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதவண்ணம் வேலைத்திட்டங்களை உரியகாலப்பகுதிக்குள் நிறைவேற்றுவோம். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதிகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த விடயம் தொடர்பில் தொடர நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்@ர் அபிவிருத்திக்கடனிற்காக 2022 ஆம் ஆண்டு செலுத்தப்படவேண்டிய கடன் ரூபா 3,244,350 நிதிக்கூற்றில் நடைமுறைப்பொறுப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் கடன் மூலதனத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் கடன் மூலதனமானது அப்பெறுமதியினால் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் இவ்தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதிகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த பெறுமதிகளினை நடைமுறைப்பொறுப்பாக வெளிப்படுத்த எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| ஆதனவரி ஆவணங்களின் பிரகாரம் (Form 29) சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி ஆண்டிற்கான வருமதியான கட்டணம் ரூபா 6,184,799 காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் வருமானச் செலவுக்கணக்கில் காட்டப்பட்ட வீதவரிக் கணக்கில் மீதியானது ரூபா 6,364,785 ஆக காணப்பட்டிருந்ததனால் ரூபா 179,986 பெறுமதியானது வேறுபாடாக காணப்படுகின்றது. | இத்தவறினை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது | குறித்த தவறுகள் உரிய கணக்குகளில் சீர் செய்யப்படல் வேண்டும். |

#### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயங்கள் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| 10 காணி கட்டடங்கள் | 226,100,000 | காணி பாரதீனப்படுத்துவதற்கான கட்டளை | சபைக்கு உரித்தாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணி பாரதீனப்படுத்துவதற்கான கட்டளையினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 47,715,189 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 47,711,960 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| வீதங்கள் மற்றும் ஆதனவரி நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 14,147,726 இனை அறவிடுவதற்கு கடந்த 03 வருடங்களிற்கு மேலாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நிலுவை வருமானங்களின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மென்பொருளில் காணப்பட்ட குறைபாடுகளினாலேயே ஆண்டு ரீதியான நிலுவைகளினை உறுதிப்படுத்த முடியவில்லை. எனவே கணனி மயப்படுத்தப்பட்ட மென்பொருள் வடிவமைத்து தந்த நிறுவனத்திடம் ஆண்டு ரீதியான நிலுவைகள் தொடர்பில் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அறிக்கை தயாரிப்பதற்கு கோரிக்கை வழங்கப்பட்டுள்ளது.இனிவரும் காலங்களில் ஆண்டுரீதியான நிலுவைகள் வெளிப்படுத்தப்படும். | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 294,005 குத்தகை நிலுவையினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கடைகள் கேள்வி கோரப்பட்டிருந்தும் ஒருவராலும் கடைகள் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானங்கள்** | | |
| கடந்த 02 வருடங்களிற்கு மேலாக ஏனைய வருமானங்கள் நிலுவை ரூபா 1,187,870 அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ரூபா 1,187,870.23 ஆனது முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலுவையாக காட்டப்பட்டுவருகின்றது. இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| ரூபா 89,893,761 நிலையான வைப்பு நிதியானது நகர அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாது வட்டி வருமானம் உழைக்கும் நோக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. | மேற்படி நிலையான வைப்புகளில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ரூபா 24 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பினை மீளப் பெறுவதற்கு கௌரவ ஆளுநரின் G/NPC/A4/LG/Approval/80/2019 ஆம் இலக்க 14.10.2019 ம் திகதிய கடிதம் மூலம் அனுமதி பெறப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. | சபை நிதிகளினை விரையமின்றி உத்தமமட்டத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டில் சபையினால் கடந்த 04 வருடங்களிற்கு மேல் சேவையிலிருந்து விலகிய மற்றும் ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 88,478 இடர்கடன் அறவீடு செய்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | மேற்குறித்தஅலுவலர்கள் குறித்தபிரதேசத்தில் வசிக்கின்றமைக்குரிய சான்றுகள் எவையும் இல்லையென பிரதேசசெயலரினால் தெரிவிக்கப்பட்டதையடுத்து பதிவழிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக சபை அனுமதி பெறப்பட்டுள்ளது. | கடன் நிலுவையினை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள தாபன விதிக்கோவைகளின் ஏற்பாடுகளிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| **(ஆ) ஊழியர் பிணை** | | |
| 2020 மார்ச் 07 ஆம் திகதிய PF/01/2017 (அ) ஆம் இலக்க மாகாண நிதிச்சுற்று நிருபத்திற்கு அமைவாக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 24 உத்தியோகத்தர்களின் ரூபா 172,489 பிணைப்பணமானது குறித்த உத்தியோகத்தர்கள் தற்போது சபையில் கடமையாற்றாத போதும் நாளதுவரை மீளளிப்பதற்கு அல்லது உரிய பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நீண்டகாலமாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பிணைப்பணத்தினை மீளளிப்பதற்கு உரியநபர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதுடன் இதுவரை ரூபா 41,891.64 மீளளிக்கப்பட்டுள்ளது. மிகுதிப் பணமும் மீளளிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.மேலும் பெற்றுக்கொள்ளாதவர்களின் பணம் அரச வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | பிணைப் பணத்தினை மீளளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |